செ.வெ.எண்: 316 நாள்: 12.05.2020

# தஞ்சாவூர் ராசா மிராசுதார் மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தலைமையில் உலக செவிலியர் தின நிகழ்ச்சி நடைபெற்றது

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தலைமையில் உலக செவிலியர் தின நிகழ்ச்சி இன்று(12.05.2020) நடைபெற்றது.

உலக செவிலியர் தின நிகழ்ச்சியினை குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது :-

கொரோனா தடுப்புப்பணியில் முன்கள பணியாளர்களாக பணியாற்றிவரும் செவிலியர்களுக்கு உலக செவிலியர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். தஞ்சாவூர் மாவட்டத்தில் அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவர்கள், செவிலியர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கொரோனா தடுப்புப்பணியில் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றனர். தஞ்சாவூர் ராசா மிராசுதார் மருத்துவமனையில் மகப்பேறு சிகிச்சைக்காக புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. நோயாளிகளை காப்பாற்றுவது மட்டுமல்லாமல், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்திட தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், தஞ்சாவூர் மாவட்டத்திற்குள் நுழையும் அனைத்து வாகனங்களும் சோதனைச் சாவடிகளில் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு, அவர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்படுகிறது. நோய்தொற்றுக்கான அறிகுறி கண்டறியப்பட்டால், சோதனைச் சாவடி அருகாமையிலுள்ள முகாம்களிலேயே தனிமைப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இல்லையென்றால், அவரவர் வீடுகளில் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்படுகின்றனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் கொரோனா தடுப்பு பணிகள் ஒரு அணியாக செயல்பட்டு, கொரோனா பாதிப்பிலிருந்து விடுபடுவதற்கு முழு ஈடுபாட்டுடன் பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்.

தொடர்ந்து, கொரோனா தடுப்புபணியில் ஈடுபட்டுள்ள செவிலியர்களுக்கு நற்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார். முன்னதாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் உலக செவிலியர் தின விழிப்புணர்வு உறுதி மொழியினை அனைவரும் எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி முதல்வர்(பொ) டாக்டர்.மருததுறை, முன்னாள் முதல்வர் டாக்டர் குமுதா லிங்கராஜ், மருத்துவப் பேராசிரியர்கள், மருத்துவர்கள், கண்காணிப்பாளர்கள், செவிலியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.